## DEPOSITION OF WITNESS

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.149/2025 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.5 |
| பெயர் | அருள்பாண்டி | கிராமம் | |
| தந்தை பெயர் | சீனிவாசன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikandan, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 24.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா மேலக்காயம்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 10.02.2025ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் எனது நண்பர் ராஜாவும் புதுக்கோட்டை - ஆலங்குடி சாலையில் உள்ள பாரத் கேஸ் கம்பெனி அருகே நின்றுகொண்டிருந்த போது போலிசார் அந்த இடத்தை பார்த்து பார்வை மகசர் வரைபடம் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் விபத்து நடந்ததாக சொன்னார்கள். அதற்கு சாட்சியாக நானும் ராஜாவும் இருந்து பார்வை மகசரில் கையெழுத்து செய்தோம். பார்வை மகசரில் உள்ள என்னுடைய முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.3. என் கையெழுத்தை சம்பவ இடத்தில் வைத்து தான் போட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் எழுதிய பேப்பரில் தான் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன்.

அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தின் ரோட்டின் நடுவே சென்டர் மீடியன் இருந்தது. சம்பவ இடத்தில் ரோட்டின் தெற்கே 1 பனைமரம் இருந்தது. வடக்கு பக்கம் என்ன இருந்தது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் பார்வை மகசர் ஆவணத்தில் சம்பவ இடத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் ஆவணத்தில் ஒரே ஒரு கையெழுத்து மட்டும் தான் செய்தேன். என்னை காவல் நிலையம் அழைத்து விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

Sd/–அருள்பாண்டி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**